# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

**No.47] CHENNAI WEDNESDAY, DECEMBER 14,2011**

**Karthigai 28, Thiruvalluvar Aandu-2042**


## Part VI --- Section 2

(Supplement)

NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**(அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ./நு.கு.தீ.ம &மி.கு / 6–5, 23–11–2011 நாளிட்டது)**

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 42ஆம் பிரிவின்(5),(6),(7) ஆகிய உட்பிரிவுகளுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின்மூலம் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி (இதன் பின்பு இதில் முதன்மை ஒழுங்குமுறைவிதிகள் என்று குறிப்பிடப்படும்) 2004ஆம் ஆண்டு நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறைவிதிகளை 2004 பிப்ரவரி 18ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் குறித்துரைத்துள்ளது மற்றும் அறிவிக்கை செய்துள்ளது.

மற்றும் முன்னதாக தனிச்சிறப்புடையவற்றில் உள்ளடங்காத ஒருசில பொருட்பாடுகள் பொறுத்து ஒருசில இடர்ப்படுகளை நீக்குவதற்காக முதன்மை விதிகளுக்கு திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் அதற்கிணங்க அத்தகைய முந்திய வெளியீடு ஏற்றுக் கொள்ளப்படலாகிறது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 42ஆம் பிரிவின் (5),(6),(7) ஆகிய உட்பிரிவுகளுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின் மூலம் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், முதன்மை ஒழுங்குமுறைவிதிகளுக்கு பின்வரும் திருத்தத்தைச் செய்கிறது :–

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

அ) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2011ஆம் ஆண்டு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறைவிதிகளைத் (திருத்தம் செய்யும்) ஒழுங்குமுறைவிதிகள் என்று வழங்கப்படும்.

ஆ) இவை, தமிழ்நாடு அரசிதழில் அவை வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

2. **முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 10ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் :—**

முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 10ஆம் ஒழுங்குமுறைவிதியின் (2)ஆம் உள்—ஒழுங்குமுறைவிதிக்குப் பதிலாக, பின்வரும் உள்—ஒழுங்குமுறைவிதி அமைக்கப்படுதல் வேண்டும் , அதாவது :—

“ *(2) மின்குறைதீர்ப்பாளராக நியமிக்கப்படுவதற்காகப் பரிசீலிக்கப்படும் நபரின் குறைந்தபட்ச வயதானது 50 வயதாக இருத்தல் வேண்டும் ”.*

3. **முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 13ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் :—**

முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 13ஆம் ஒழுங்குமுறைவிதிக்குப் பதிலாக பின்வரும் ஒழுங்குமுறைவிதிகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :—

“*13. மின்குறைதீர்ப்பாளராக நியமிக்கப்படும் நபர், திறமையானவராகவும், நேர்மையானவராகவும், மிகுந்த நற்பெயருடையவராகவும், இருப்பதோடு, மின்பொறியியல் கல்வி தகுதியுடையவராகவும், மின்துறையில் அனுபவமிக்கவராகவும் இருத்தல் வேண்டும். மின்பகிர்மான நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளில் பணி செய்த அனுபவமும், சட்ட அறிவும் கூடுதல் தகுதிகளாகும் .*”

*(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)*

**செயலாளர்**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்